இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

2025 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

2025, செத்தெம்பர் மாதம் 26 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II** ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 70.00 **தபாற் செலவு : ரூபா 150.00**

இச்சட்டத்தை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2025 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க,
தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டம்

[2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச.வ. - ஓ 2/2025

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தினைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

1. இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (5) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன்மூலம், இத்தால் திருத்தப்படுகின்றது:-

> "(6) உட்பிரிவுகள் (7) மற்றும் (8) இல் ஏற்பாடுசெய்யப்பட்டவை தவிர, கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள் ஏதேனும் கணக்காய்வுக்குட்படு உருவகம் தொடர்பில் கணக்காய்வொன்றை நிறைவேற்றும்போது, ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு முரணாக ஏதேனும் கொடுக்கல்வாங்கலில் ஏதேனும் மோசடி, ஊழல் அல்லது கையாடலொன்று புரியப்பட்டு வந்துள்ளதென்று நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ளவிடத்து, கணக்காய்வாளர் தலைமையதிபதி, சட்ட நடவடிக்கைக்காக சட்ட வலுவுறுத்தல் அதிகாரியொருவருக்கு உடனடியாக முறைப்பாடொன்றைச் செய்யும்படி அத்தகைய கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

(7) மோசடி, ஊழல் அல்லது கையாடல் பற்றிய சார்த்துதலானது பிரதான கணக்கீட்டு அலுவலருக்கெதிராக இருக்குமிடத்து, கணக் காய்வாளர் தலைமையதிபதி, சட்ட நடவடிக் கைக்காக சட்ட வலுவுறுத்தல் அதிகாரியொருவருக்கு உடனடியாக முறைப்பாடொன்றைச் செய்யும்படி அமைச்சரவையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(8) கணக்காய்வாளர் தலைமையதிபதியிடமிருந்து அத்தகைய அறிவிப்பொன்றைப் பெற்றதன்மேல், சட்ட வலுவுறுத்தல் அதிகாரியொருவருக்கு உடனடியாக முறைப்பாடொன்றைச் செய்வதும் மற்றும் (6) ஆம் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட முறைப்பாடுகள்பற்றிய விசாரணையின் முன்னேற்றம்பற்றி காலத்திற்குக் காலம் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிக்கையிடுவதும், விடயத்துக்கேற்ப, கணக் காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் அல்லது அமைச்சரவையினது செயலாளரின் கடமையாதல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(அ) பாராளுமன்றத்தின், 19 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கணக்காய்வாளர் தலைமையதி பதியினால் செய்யப்பட்ட விதப்புரையைக் கவனத்துட்கொண்டு மிகைக்கட்டண பரிசீலனைக் குழுவின் வேண்டுகோளின்மீது தவிர அல்லது நீதிமன்றக் கட்டளையொன்றின்மூலம் தவிர அல்லது (ஆ) என்னும் பந்திக்கு அமைய ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்காகத் தவிர,

எவையேனும் தகவல்களை வெளிவிடுவதற்கு எவரேனும் ஆளினால் வலுக்கட்டாயப்படுத்தப்படுதலுமாகாது;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது அதன் (2) ஆம் உட்பிரிவில், "ஐந்து மாதங்களினுள் ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தினதும் ஆளும் குழுவுக்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆறு மாதங்களினுள், விடயத்திற்கேற்ப, ஒவ்வொரு கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு, கணக்கீட்டு அலுவலருக்கு அல்லது ஆளும் குழுவுக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது அதன் (3) ஆம் உட்பிரிவில், "கணக்காய்வை நிறைவேற்றுவதில் உறப்பட்ட ஆகுசெலவைக் கழித்த பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கணக்காய்வை நிறைவேற்றுவதில் உறப்பட்ட ஆகுசெலவையும் அத்தகைய கட்டணத்தின் பதினைந்து சதவீதமான தொகையொன்று 37 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட கணக்காய்வு நிதியத்திற்கு வரவுவைக்கப்பட வேண்டிய அத்தொகையையும் கழித்த பின்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவைத் திருத்துதல்

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 19 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும்:-

"(அ) வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் வேறுவகையாகக் குறிப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலொழிய, கணக்காய்வாளர் தலைமையதிபதி, கணக்காய்வுக்குட்படு உருவகமொன்றின் ஏதேனும்

எழுத்திலான சட்டத்துக்கு முரணாகச் செய்யப்பட்டுள்ளதென்றும் மற்றும் அக்கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் அக்கொடுக்கல்வாங்கலில் சம்பந்தப் பட்டோரின் மோசடி, கவனக்குறைவான அசட்டை, ஊழல் அல்லது கையாடல் காரணமாக ஏதேனும் குறைபாடு அல்லது இழப்பு விளைந்துள்ளதென்றும் நம்புவதற்கு நியாயமான ஏதுக்களைக் கொண்டிருக்குமிடத்து, அவர், அக் கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் அத்தகைய கொடுக்கல்வாங்கலிலான ஏதேனும் குறைபாட்டின் அல்லது இழப்பின் தொகைமீதான மிகைக் கட்டணமொன்றை விதிக்கும்படி 21 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவுக்கு அவரது விதப்புரையைச் செய்தல் வேண்டும்.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்;

(3) அதன் (3) ஆம் உட்பிரிவில்-

(அ) "கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், அறவிடப்படவேண்டிய தொகையை விதிப்பதில், பின்வரும் நடவடிக்கை முறையைக் கடைப்பிடித்தல் வேண்டும்:- "என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவானது, கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் செய்யப்பட்ட விதப்புரைமீதான அதன் முடிபைச் செய்வதில், பின்வரும் நடவடிக்கை முறையைக்கடைப்பிடித்தல்வேண்டும்:-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அதன் (அ) என்னும் பந்தியில், “(1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகள்” என்பதிலிருந்து தொடங்கி அப்பந்தியின் முடிவுவரையுள்ள சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “(1) ஆம் உட்பிரிவு தொடர்பில் காரணங்காட்டி முறையீடு செய்வதற்கு அத்தகைய ஆள் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பொன்றை அளித்தலும் வேண்டும்.” என்னும் சொற்களையும் எண்ணையும் இடுவதன் மூலமும்;

(இ) அதன் (அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(அஅ) அவசியமானவிடத்து, முடிபு செய்வதற்கு முன்னர் கணக் காய்வாளர் தலைமை யதிபதியின் விதப்புரை தொடர்பில் அவரிட மிருந்து மேலதிக தெளிவு படுத்துகையை அல்லது ஆவணங்களைக் கோருதல் வேண்டும்;”;

(ஈ) அதன் (இ) என்னும் பந்தியில், “கணக் காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர்” என்னும் சொற் களுக்குப் பதிலாக, “மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு” என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(உ) அதன் (உ) என்னும் பந்தியில், “கணக் காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரின் முடிபு, பின்வருவனவற்றைக் குறித்துரைத்து

மிகைக்கட்டணச் சான்றிதழொன்றை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் முடிபு, பின்வருவனவற்றைக் குறித்துரைத்து, அத்தகைய கணக் காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலருக்கூடாக மிகைக் கட்டணச் சான்றிதழொன்றை" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(4) அதன் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்து வதன்மூலமும்:-

"(3அ) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு பிரதான கணக்கீட்டு அலுவலரொருவர்மீது மிகைக்கட்டணமொன்றை விதிப்பதற்கு முடிபுசெய்யுமிடத்து, (3) ஆம் உட்பிரிவின் கீழான அதன் முடிபு பற்றிய அறிவித்தலானது அதன்கண் குறித்துரைக்கப்பட்ட தகவல் களைக் குறித்துரைக்கின்ற மிகைக்கட்டணச் சான்றிதழொன்றை வழங்கி அமைச் சரவையின் செயலாளருக்கூடாகச் செய்யப் படுதல் வேண்டும்.

(3ஆ) எவரேனுமாள் மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் முடிபினால் திருப்தியுறாதவிடத்து, அவர் இப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழ் அல்லது (3அ) என்னும் உட்பிரிவின்கீழ் அறிவித்தல் வழங்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது வேலை நாட்களினுள் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன் முறையீடு செய்யலாம்.

(3இ) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை, விடயத்துக்கேற்ப, அமைச்சரவை யின் செயலாளரினால் அல்லது கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலரினால் மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவுக்கும் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதி பதிக்கும் எழுத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்";

(5) அதன் (4) ஆம் உட்பிரிவில், "கணக்காய்வுக்குட் படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விடயத்துக்கேற்ப, அமைச்சரவையின் செயலாளர் அல்லது அத்தகைய கணக் காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(6) அதன் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(5) பிரிவு 21 இன்கீழ் நியமிக்கப்பட்ட மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவானது பின்வரும் தகவல்கள் உள்ளடங்குகின்றதான அறிக்கையொன்றை 29 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசிய கணக்காய்வு அலுவல கத்தின் வலைத்தளத்தில் அரையாண்டுக் கொருமுறை வெளியிடுதல் வேண்டும்:-

(அ) மிகைக்கட்டணமொன்றை விதிப் பதற்கு (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) இன்கீழ் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடமிருந்து பெறப் பட்ட விதப்புரைகளின் எண்ணிக்கை;

(ஆ) விதிக்கப்பட்ட மிகைக்கட்டணங்கள், வேறுபடுத்தப்பட்ட விதப்புரைகள் மற்றும் முடிவுறாதுள்ள முடிவுகளின் எண்ணிக்கைகள் பற்றிய பகுதிப்பிரிப்பொன்று உள்ளடங்கலாக, மிகைக்கட்டணப் பரீசீலனைக் குழுவினால் பரிசீலிக்கப்பட்ட விதப்புரைகளின் எண்ணிக்கை;

(இ) அவ்வறிக்கையிடற் காலப்பகுதிக்காக விதிக்கப்பட்ட மிகைக்கட்டணம் மற்றும் உண்மையில் சேகரிக்கப்பட்ட மிகைக்கட்டணம் என்பன பற்றிய கூற்றொன்று; அதனை மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவானது, விடயத்திற்கேற்ப, இயைபான பிரதான கணக்கீட்டு அலுவலரிடமிருந்து அல்லது அமைச்சரவையின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டுமென்பதுடன் அவை பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும்:-

(i) மூன்றாம் உட்பிரிவின் (ஈ) எனும்பந்திக்கமைய ஏதேனும் ஏற்புடையற்பாலதான வட்டி பற்றிய விபரங்கள் உட்பட விதிக்கப்பட்ட காலப் பகுதியினுள் அத்தகைய கொடுப்பனவைச் சேகரிப்பதற்குத் தவறியுள்ள கணக்காய்வுக்குட்படு உருவகங்கள்; அத்துடன்

(ii) இருபத்திமூன்றாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி மிகைக்கட்டண பரிசீலனைக் குழுவினால் தொடக்கி வைக்கப்பட்டுள்ள அறவீட்டு வழக்குகளின் எண்ணிக்கை.

(6) அமைச்சரவையின் செயலாளர் அல்லது அத்தகைய கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர், (4) ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் மிகைக்கட்டணச் சான்றிதழில் குறித்துரைக்கப்பட்ட அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு தவறுமிடத்து, மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவானது அத்தகைய தவறுகை தொடர்பில், விடயத்துக்கேற்ப, பகிரங்கக் கணக்குகள் குழுவுக்கு அல்லது பகிரங்கத் தொழில் முயற்சிகள்மீதான குழுவுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்."; அத்துடன்

(7) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன்மூலமும்:-

"மிகைக்கட்டணம்
ஒன்றை விதித்தல்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவை நீக்குதல்

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவை நியமித்தல்

21. (1) பிரிவு 19 இன்கீழ் செய்யப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் மிகைக்கட்டணமொன்றை விதித்தல் பற்றிய விதப்புரை ஒவ்வொன்றின்மீதும் முடிபொன்றைச் செய்வதற்கு அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரத்துக்கமைய, சனாதிபதியினால் நியமிக்கப்படவேண்டிய பின்வரும்

ஐந்து உறுப்பினர்களைக்கொண்ட மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவொன்று இருத்தல் வேண்டும்:-

(அ) (இதனகத்துப்பின்னர் “தவிசாளர்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் தவிசாளராக இருக்க வேண்டிய, உயர் நீதிமன்றத்தின் அல்லது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதியொருவர்;

(ஆ) கணக்காய்வு, சட்டம், பொது நிதி முகாமை, பொது நிருவாகம் மற்றும் பொறியியல் ஆகிய துறைகளுள் ஏதேனுமொன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் தேர்ச்சியைக் கொண்டுள்ள ஆட்களிடையேயிருந்து மூன்று உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) இலங்கை பட்டயக் கணக்காளர் கள் நிறுவகத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஓர் உறுப்பினர்.

(2) தேசிய கணக்காய்வு அலுவல கத்தினதும் மற்றும் இலங்கை அரச கணக்காய்வாளர் சேவையினதும் உறுப்பினர்கள், மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவரா தலாகாது. கணக்காய்வாளர் தலைமையதிபதி, மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவராக இருத்தலாகாது. மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவானது கணக்காய்வாளர் தலைமையதிபதியினின்றும் சுயாதீனமாகச் செயலாற்றுதல் வேண்டும்.

(3) நியமனத் தேதியன்று எழுபது வயதை அடைந்துள்ள ஆளொருவர், மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராத லாகாது.

(4) உட்பிரிவுகள் (1), (2) மற்றும் (3) இன் ஏற்பாடுகளுக்கமைய, சனாதிபதி, இச்சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து அல்லது எத்தேதியன்று மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவில் வெற்றிடமொன்று ஏற்படுகின்றதோ அத்தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் (1)ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளின்கீழ் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பினர்கள் பற்றிய அவரது விதப்புரையை அரசியலமைப்புப் பேரவைக்குச் செய்தல் வேண்டும்.

(5) அரசியலமைப்புப் பேரவை, சனாதிபதியின் விதப்புரையைப் பெற்ற திலிருந்து பதினான்கு நாட்களுக்குள், அவ்விதப்புரையை அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்க மறுத்தல் வேண்டும்.

(6) சனாதிபதி, அரசியலமைப்புப் பேரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட திலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்களை நியமித்தல் வேண்டும்.

(7) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவர், அத்தகைய உறுப் பினராகப் பதவியைப் பொறுப்பேற்க முன்னர் அத்தகைய நியமனத் தேதியன்றுள்ளவாறாக அவரது அக்கறைகள் பற்றிய பொதுவான

வெளிப்படுத்துகையொன்றை அரசியலமைப்புப் பேரவைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(8) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவுக்கு முன்னர் எடுத்துக்கொள்ளப்படவேண்டியுள்ள ஏதேனும் கருமத்தில் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் அக்கறையைக் கொண்டுள்ள மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவர், அத்தகைய அக்கறையின் தன்மையை மிகைக்கட்டண பரிசீலனைக் குழுவுக்கு வெளிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அக்கருமம் மிகைக்கட்டணப் பரிசீலனைக்குழுவின் தொடர்பில் ஏதேனும் முன்னாராய்வில் அல்லது முடிபில் பங்கேற்றலுமாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 21அ, 21ஆ, 21இ, 21ஈ, 21உ மற்றும் 21ஊ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் உட்புகுத்தப்படுவதுடன் அவை அச்சட்டவாக்கத்தின் 21அ, 21ஆ, 21இ, 21ஈ, 21உ மற்றும் 21ஊ எனும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவராகவிருப்பதற்கான தகமையீனங்கள்

21அ. ஆளொருவர்-

(அ) பாராளுமன்றத்தின் ஓர் உறுப்பினராக, ஏதேனும் மாகாண சபையின் ஓர் உறுப்பினராக அல்லது உள்ளூரதிகார சபையொன்றின் ஓர் உறுப்பினராக இருந்தால் அல்லது வந்தால்;

(ஆ) ஓர் இலங்கைப் பிரசையாக இல்லாதிருந்தால் அல்லது இல்லாதொழிந்தால்;

(இ) இலங்கையில் அல்லது வேறே தேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவராகக் காணப் பட்டால் அல்லது வெளிப் படுத்தப்பட்டால்;

(ஈ) இலங்கையில் அல்லது வேறே தேனும் நாட்டில் ஏதேனும் சட்டத்தின்கீழ் வங்கி முறிந்தவர் அல்லது கடனிறுக்க வகை யற்றவரென வெளிப்படுத்தப் பட்டவராகவிருந்து பொறுப்பு விடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்ற ஒருவராக அல்லது வங்கிமுறிந்த ஒருவராக இருந்தால்;

(உ) இலங்கையிலுள்ள அல்லது வேறேதேனும் நாட்டிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் விதிக் கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அனுபவித்துக் கொண்டிருந்தால் அல்லது அனுபவித்திருந்தால்; அல்லது

(ஊ) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவராக அவரது பணிகளை அவர் நிறைவேற்றுவதைப் பாதிக்கக் கூடிய எவையேனும் நிதிசார் அல்லது வேறு அக்கறைகளைக் கொண்டிருந்தால்,

அவ்வாள், மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்படு வதற்கு அல்லது ஓர் உறுப்பினராகத்

தொடர்ந்திருப்பதற்குத் தகைமையற்றவராதல் வேண்டும்.

மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழு உறுப்பினர்களின் பதவிக்காலம்

21ஆ. மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஒவ்வோர் உறுப்பினரும் பதவிவிலகல்மூலம், இறப்பின்மூலம் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல்மூலம் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலொழிய, அவரது நியமனத் தேதியிலிருந்து மூன்றாண்டுகளைக் கொண்டவொரு காலப் பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டுமென்பதுடன், பதவியிலிருந்து அவர் அகற்றப்பட்டிருந்தாலொழிய அடுத்தடுத்ததாயினுஞ்சரி அல்லது வேறு வகையாயினுஞ்சரி மேலுமொரு பதவிக் காலத்துக்கு மேற்படாமல் மீள நியமிக்கப்படுவதற்குத் தகவுடையவராதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவின் தவிசாளரினதும் உறுப்பினர்களினதும் பதவிக்காலம் முடிவுறுகையில், 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் புதிய உறுப்பினர்கள் நியமிக்கபட்டிராதிருப்பின், அத்தகைய முடிவுறுகைக்கு நேர்முன்னரான நாளில் பதவி வகிக்கின்ற மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் தவிசாளரும் உறுப்பினர்களும் புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படும்வரை தொடர்ந்து பதவிவகித்தல் வேண்டும்.

மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழு உறுப்பினர்களின் பதவி வறிதாதல்

21இ. (1) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர் எவரும், எந்த நேரத்திலும், சனாதிபதிக்கு முகவரியிட்டனுப்பும் கடிதமொன்றின்மூலம் அவரது பதவியிலிருந்து பதவிவிலகலாம் என்பதுடன் அத்தகைய பதவி

விலகலானது சனாதிபதியினால் எழுத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவதன்மேல் பயனுறுதலும் வேண்டும்.

(2) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவர் சுகயீனம் காரணமாக, உடற்றகுதியீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக அவரது பதவிக்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்குத் தற்காலிகமாக இயலாதவராகவுள்ளவிடத்து, சனாதிபதி 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரினிடத்திற் செயலாற்றுவதற்கென வேறு எவரேனுமாளை நியமிக்கலாம்.

(3) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவர் இறக்கின்றவிடத்து, பதவி விலகுமிடத்து அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுமிடத்து சனாதிபதி 21 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு அவரது இடத்திற்கு வேறோர் ஆளை நியமிக்கலாம் என்பதுடன் அவ்வாறு நியமிக் கப்பட்ட ஆள் எவ்வுறுப்பினரை அவர் அடுத்துறுகின்றாரோ அவ்வுறுப்பினரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவிவகித்தலும் வேண்டும்.

(4) சனாதிபதி, எழுத்தில் குறித்தளிக் கப்பட்ட காரணங்களுக்காகவும் அரசிய லமைப்புப் பேரவையின் முன்னங் கீகாரத்துடனும், மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவரை பதவியிலிருந்து நீக்கலாம். பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ள உறுப்பினரொருவர்

மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினரொருவராக மீள நியமிக்கப் படுவதற்கு அல்லது வேறேதேனும் வகையில் மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவிற்கு சேவையாற்றுவதற்குத் தகவுடைய வராதலாகாது.

மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவின் கூட்டங்களும் கூட்ட நடப்பெண்ணும்

21ஈ. (1) தவிசாளர் மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் வருகைதராதுள்ளவிடத்து, சமுக மளித்துள்ள உறுப்பினர்கள் தம்முள்ளிருந்து ஒருவரைத் தவிசாளராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(2) (அ) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் முடி பெடுப்பதற்கான எல்லாக் கருமங்களும் அத்தகைய கூட்டத்திற்குச் சமுகமளித்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மை வாக்குகள் மூலம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டமொன்றில் கவனத்துட் கொள்ளப்பட்ட ஏதேனும் கருமம்மீதான வாக்கெடுப்பில் சமனிலையொன்று காணப்படும் பட்சத்தில், அக்கூட்டத்தின் தவிசாளர் அவரது மூலவாக்குக்கு மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் செயல், முடிபு அல்லது நடவடிக்கை எதுவும், மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஏதேனும் வெற்றிடம் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில்

ஏதேனும் குறைபாடு இருப்பதன் காரணமாக மட்டும் செல்லுபடியற்றதாக இருப்பதாகக் கருதப்படுதலாகாது.

(4) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் மூன்றாக இருத்தல் வேண்டும்.

(5) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய, மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையையும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களின் கொடுக்கல் வாங்கல்களையும் கொண்டுநடாத்துவதையும் ஒழுங்குபடுத்தலாம்.

மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு உறுப்பினர்களின் ஊதியம்

21உ. மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியம் செலுத்தப்படுதல் வேண்டும்.

மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு கூட்டங்களுக்கு நிபுணர்களை அழைத்தல்

21ஊ. (1) மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவானது, அது அவசியமெனக் கருதுகின்ற போதெல்லாம், அதன் பணிகளை வினைத்திறனாக நிறைவேற்றுவதற்காக அத்தகைய விடயம்பற்றி அதன் ஏதேனும் கூட்டத்தில் அதனால் கையாளப்படும் ஏதேனும் விடயம்பற்றிய நிபுணர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துக்காக அத்தகைய கூட்டத்தில் மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவினால் கையாளப்படுகின்றதான ஏதேனும் விடயத்தின் மீது நிபுணத்துவத்தைக் கொண்டுள்ள

மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் நிபுணர்களை அத்தகைய ஏதேனும் கூட்டத்திற்கு அழைக்கலாம்:

ஆயின், எவ்வாறாயினும், மிகைக் கட்டணப் பரிசீலனைக் குழுவானது அத்தகைய நிபுணர்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளுதல் அல்லது நிராகரித்தல் பற்றிய முற்றுமுழுதான தற்றுணிபைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிபுணர்கள், வாக்களிப்பதற்கான உரிமை களைக் கொண்டிருத்தலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு, "கணக் காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விடயத்திற்கேற்ப, அமைச்சரவையின் செயலாளர் அல்லது கணக்காய்வுக்குட்படு உருவகத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு, அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக உடனடி நடவடிக்கை அவசிய மாகவுள்ளதெனத் திருப்திப்படுமிடத்தும், 20 (1) ஆம் பிரிவின்கீழ் குழுமுன்னர் அல்லது 20 (4) ஆம் பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று முடிவுறாதிருந்தா லொழிய, கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு, அத்தகைய பணத்தொகையை அறவிடுவதற்காக உடனடி நடவடிக்கை அவசியமாகவுள்ளதெனத்

திருப்திப்படுமிடத்தும், 19 ஆம் பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடொன்று முடிவுறா திருந்தாலொழிய, மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அதன் (3) ஆம் உட்பிரிவில்,-

(அ) அதன் (அ) என்னும் பந்தியில், "கணக்காய்வுச் சேவை ஆணைக் குழுவினால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக,"மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழுவினால்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அதன் (ஆ) என்னும் பந்தியில், "விடயத்துக்கேற்ப, 20 (1) ஆம் பிரிவின்கீழ் மிகைக்கட்டண மேன் முறையீட்டுக் குழுவுக்கு அல்லது 20(4) ஆம் பிரிவின்கீழ் மேன் முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "19 ஆம் பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(3) அதன் (9) ஆட் உட்பிரிவில், "கணக்காய்வுச் சேவை ஆணைக்குழு" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மிகைக்கட்டணப் பரிசீலனைக் குழு" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அதன் (10) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

“(ஏ) பிரிவு 7 இன் (6) ஆம் அல்லது (7) ஆம் உட்பிரிவின்கீழ், ஏதேனும் மோசடி, ஊழல் அல்லது கையாடல் பற்றிய அறிவித்தல் கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பெறப்பட்டதன்மேல், அவர், தாமதமின்றி சட்ட நடவடிக்கைக்காக சட்ட வலுவுறுத்தல் அதிகாரியொருவருக்கு முறைப்பாடொன்றைச் செய்தல் வேண்டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவைத் திருத்துதல்

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, “ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஓராண்டை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனை அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதல் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில் “ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் இருபத்தையாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும்.” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது மூன்றாண்டுகளை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மற்றும் மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவைத் திருத்துதல்

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 55 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) “கணக்கய்வாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாள்” எனும்

வரைவிலக்கணத்திற்கு நேர்முன்னாரக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்து வதன்மூலமும் :-

““கவனக்குறைவான அசட்டை’’ என்பது, ஒருசெயல் அல்லது நடத்தையில் சம்பந்தப்பட்ட நியாயமற்ற ஆபத்து பற்றிய விழிப்புணர்வு இருந்தாலும் அச்செயலில் அல்லது நடத்தையில் ஈடுபடுகின்ற ஆள், அதனை தவிர்ப்பதற்கு நியாயமான கவனத்தை இனியும் எடுக்கத் தவறுகின்ற செயல் அல்லது நடத்தை எனப் பொருள்படும;”;

(2) “கணக்காய்வாளர் தலைமையதிபதி” என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

““பகிரங்கக் கணக்குகள் குழு” மற்றும் “பகிரங்கக் தொழில்முயற்சிகள்மீதான குழு” என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுப் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் நியதிகளின்படி பாராளுமன்றத்தினால் நியமிக்கப்பட்ட பகிரங்கக் கணக்குகள் குழு மற்றும் பகிரங்கத் தொழில்முயற்சிகள்மீதான குழு எனப் பொருள்படும்;”; அத்துடன்

(3) “தகவல்” என்னும் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரை விலக்கணத்தை இடுவதன்மூலமும்:-

““இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம்” என்பது, 1959 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பட்டயக் கணக்காளர்கள் நிறுவகச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகம் எனப் பொருள்படும்;”.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

16. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டங்களின் தமிழ் பிரதிகளை "பிரகாசன பியச", அரசாங்க அச்சுத் திணைக்களம் இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 8 இல் விலைக்குப் பெற்றுக் கொள்ள முடியும்